தினமணி

4/12

ஈரோடு/நீலகிரி

# கோபி கலை அறிவியல் கல்லூரியில் புதிய கட்டடங்கள் திறப்பு



விழாவில் பங்கேற்ற அமைச்சர் சு.முத்துசாமி, மருத்துவர்கள் நல்ல பழனிசாமி, ஜே.எஸ்.புவனேஸ்வரன் மற்றும் கல்லூரி நிர்வாகிகள்.

**கோபி , அக். 28:** கோபி கலை அறிவியல் கல்லூரியில் புதிய கட்டடங்கள் திறப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரியின் ஆட்சிக்குழுத் தலைவர் ஜெ.பாலமுருகன் தலைமை வகித்தார். கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் எம்.தரணிதரன் வரவேற்றார். தமிழக வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி வணிகவியல் கட்டடத்தைத் திறந்துவைத்துப் பேசினார்.

கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனைத் தலைவர் மருத்துவர் நல்ல பழனிசாமி கலந்து கொண்டு கே.எம்.சுப்பிரமணியம் அரங்கத்தைத் திறந்துவைத்துப் பேசினார். கோவை பி.எஸ்.ஜி. மருத்துவக் கல்லூரியின் மருத்துவ இயக்குநர் மருத்துவர் ஜே. எஸ்.புவனேஸ்வரன் வேலைவாய்ப்பு மையக் கட்டடத்தைத் திறந்துவைத்துப் பேசினார். விழாவில் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கல்லூரி முதன்மையர் ஆர். செல்லப்பன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். கல்லூரி முதல்வர் வீ.தியாகராசு நன்றி கூறினார்.

**கருத்தரங்கம்:** கோபி கலை அறிவியல் கல்லூரியில் மனித மூலதனம் மற்றும் தொழில்துறை உறவுகள் குறித்த கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் வீ.தியாகராசு தலைமை வகித்தார். மேலாண்மைத் துறை இயக்குநரும், தலைவருமான சாய்ராம் சுப்பிரமணியம் வரவேற்றார். கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் எம்.தரணிதரன், கல்லூரி முதன்மையர் ஆர்.செல்லப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கருத்தரங்கில் சக்தி சுகர்ஸ் நிறுவனத்தின் மனிதவள மற்றும் நிர்வாக துணைப் பொது மேலாளர் எம்.மோகன்குமார், மனித மூலதனம் மற்றும் தொழில் துறை உறவுகள் என்ற தலைப்பில் பேசினார்.

தமிழகம் முழுவதும் கிடைக்கும் யதார்த்தத் தமிழ் நாளிதழ்

# தமிழ் அஞ்சல்

வாழ்க தமிழ்

RNI:TNTAM/2015/61214



## கோபி கலை அறிவியல் கல்லூரியில் கட்டட திறப்பு விழா

கோபி, அக். 30-

கோபி கலை அறிவியல் கல்லூரியில் வணிகவியல் கட்டடம், கே.எம்.சுப்பிரமணியம் அரங்கம், வேலைவாய்ப்புமையக் கட்டடம் திறப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரியின்செயலர் மற்றும் தாளாளர் எம்.தரணிதரன் வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் ஆட்சிக்குழுத் தலைவர் ஜெ.பாலமுருகன் தலைமை தாங்கினார். இவ்விழாவில் வீட்டுவசதி, நகர்புற வளர்ச்சி மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்சு.முத்துசாமி வணிகவியல் கட்டடத்தைத் திறந்து வைத்து மாணவர்கள் வாழ்வு வளமாகஅமைவதற்கான வழிகளை எடுத்துரைத்து சிறப்புரை ஆற்றினார். மேலும் இவ்விழாவில் கோயமுத்தூர்கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனைத் தலைவர் மருத்துவர் நல்ல பழனிசாமி கே.எம்.சுப்பிரமணியம் அரங்கத்தைத் திறந்து வைத்து கல்வியின் மகத்துவம் குறித்து சிறப்புரைஆற்றினார். அத்துடன் இவ்விழாவில் கோயமுத்தூர் பி.எஸ்.ஜி.மருத்துவக் கல்லூரியின் மருத்துவஇயக்குநர் மருத்துவர் ஜே.எஸ்.புவனேஸ்வரன் அவர்கள் வேலைவாய்ப்புமையக் கட்டடத்தைத் திறந்து வைத்துமாணவர்களிடையே எதிர்காலத்தின் வேலைவாய்ப்பு நிலைகள் குறித்து சிறப்புரை ஆற்றினார்.விழாவின் நிறைவாக கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் முனைவர் வீ.தியாகராசு நன்றியுரை வழங்கினார். ஆட்சிக்குழு உறுப்பினர்கள், முதன்மையர், பேராசிரியர்கள், அலுவலர்கள் மாணவ மாணவிகள் மற்றும் பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# கோபி கல்லூரியில் புதிய கட்டிட திறப்பு விழா

கோபி, நவ.1-

கோபி கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் புதியதாக கட்டியுள்ள கட்டிட திறப்பு விழா நடை பெற்றது. கல்லூரி ஆட்சிக்குழு தலைவர் பாலமுருகன் தலைமை வகித்தார். கல்லூரி செயலர் தரணீதரன் வரவேற்றார். அமைச்சர் முத்துசாமி கலந்து கொண்டு வணிகவியல் கட்டிடத்தை திறந்து வைத்து மாணவர் களின் வாழ்வு வளமாக அமைவதற்கான வழிகளை எடுத்துஉரைத்தார். கோவை கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை தலைவர் நல்லா.பழனிச்சாமி கலந்து கொண்டு புதிய அரங்கத்தை திறந்து வைத்து, கல்வி யின் மகத்துவம் குறித்து பேசினார்.

கோவை, பி.எஸ்.ஜி. மருத்துவ கல்லூரி இயக்குநர் டாக்டர். புவனேஸ்வரன், வேலைவாய்ப்பு அரங்கத்தை திறந்து வைத்து பேசினார். கல்லூரி முதல்வர் தியாக ராசு நன்றி கூறினார். விழாவில், கல்லூரி ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள், டீன்.செல்லப்பன், பேராசிரியர்கள், மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

Dinamalar 01.11.23




கோபி கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் புதிய கட்டிடத்தை அமைச்சர் முத்துசாமி திறந்து வைத்தார்.























Gobi Arts & Science College
Buildings opening Ceremony
28.10.23
புதிய கட்டிடங்கள் திறப்பு விழா
GOBICHETTIPALAYAM